1982 மார்ச் 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே வர இருக்கின்ற சட்டத்திலே, ஏற்கனவே இருக்கின்ற 'லூப்-ஹோல்ஸ்' அடைக்கப்பட்டு, 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற கொள்கையை உய்விக்கும் வகையில் புதிய சட்டம் வழிவகுக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுமார் 13,003 அளவிற்கு கணக்கிற்கு வரவில்லை என்று சொன்னார்கள். அது சம்பந்தமாக எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது? அதிலே உயர்மட்டத்தில் இருப்பவர்கள் யார், கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் யார்? அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே உயர் பதவியில் இருந்தவர் 8 ஆண்டு களுக்கு முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சங்கத்தின் தலைவர். அதற்கு அடுத்தப்படியாக உள்ளவர் 8 ஆண்டுகளுக்கு முன்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சங்கத்தின் கௌரவ செயலாளர்.

சிறைகளில் சிற்றுண்டிச்சாலை வசதி

*வினா எண் 524—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது அனைத்து சிறைகளுக்கும் கேன்டீன் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அப்படி கேன்டின் வசதியில்லாத சிறைகளுக்கும் கேன்டின் வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) வேலூர் மாநில மகளிர் சிறையை தவிர மற்ற எல்லா மத்திய சிறைகளிலும் சிறைவாசிகள் கேன்டீன் திறக்கப்பட்டுள்ளது.

(ஆ) வேலூர் மாநில மகளிர் சிறையில் சிறைவாசிகள் கேன்டீன் திறப்பது தகுந்த சமயத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, சிறையில் கேன்டீன் வசதி செய்யப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது எல்லாம், அந்தக் கேன்டீனை யார் நடத்துகிறார்கள்? கேரள மாநிலத்தில் சிறைக்கைதிகளே கூட்டுறவாக இருந்து நடத்துகிறார்கள். அவர்கள் உழைப்புக்கான பணம் டோக்கன் னாக வழங்கப்பட்டு, அதன் மூலம் அவர்கள் விற்பனை செய்வதை வாங்கிக் கொள்வதாக அறிகிறோம். அந்த முறையில், அந்தக் கேன்டீன் நடத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 17

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேன்டீனைப் பொறுத்த வரையில் சிறை நிர்வாகம் தான் அதை நடத்திக் கொண்டு இருக்கிறது. சிறை நிர்வாகம் தான் அதை நடத்த முடியும். வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல், சிறைக்குள்ளேயிருக்கிற கைதிகள் அடங்கிய குழு போட்டு, அதிலே முறைக்கேடுகள் ஏதும் நடக்காமல் இருக்க பாதுகாப்புகள் செய்து அவற்றை நடத்த அரசு ஆவண செய்யும்.

திரு, இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தத் கேன்டீன்கள் சிறை நிர்வாகம் நடத்துகின்றது என்றும், வருங்காலத்தில் குழுக்கள் அமைக்கப் படும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பார்வையிடுவதற்கும், அந்தக் கேன்டீனை பற்றிய கருத்துக் களைக் கூறுவதற்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சிறை கண்காணிப்புக் குழுக்கள் இருக்கின்றன. இந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவதில் தவறு இல்லை. அதையும் அரசு ஆலோசிக்கும்.

திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சிறைச்சாலையில் கேன்டீன்கள் நடைபெறுவதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். அங்கே நடத்துகின்ற அந்தக் கேன்டீன்களில் தேவையான சாமான்களை வாங்கிச் சாப்பிடுவதற்கு கைதிகள் பணம் வைத்துக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்து இருக்கிறதா? சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் பணம் வைத்துக் கொள்ளக்கூடாது என்று விதி இருக்கிறதே. அப்படி இருக்கின்றபோது எப்படி இதைச் செய்வதற்கு அரசு அனுமதித்து இருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பர்சனல் கேஷ் பிராபர்டி அவர்கள் வைத்துக் கொள்ள அனுமதி இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் நடைமுறையில் அது இயங்கி வருகிறது.

மதுரை வீட்டு வசதி வாரியத்தின் மூலம் உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக் கட்டப்பெற்ற வீடுகள்.

* வினா எண் 525— திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் மதுரையில் இதுவரை கட்டப்பட்டுள்ள உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீடுகள் எத்தனை?